செய்தி வெளியீடு எண் : 636 நாள்: 08.08.2008

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நேரடி நியமன அடிப்படையில் உதவிப் பொறியாளர்கள் பணி நியமன ஆணை, மாசற்ற, விபத்தின்றி பணி புரிந்த வாரிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப் பதக்கம் மற்றும் சேமிப்பு பத்திரம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

------

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்த் திட்டங்களையும், பாதாள சாக்கடைத் திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இதில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு நலத் திட்ட அறிவிப்புகளை அறிவித்ததுடன் செயல்படுத்தியும் வருகிறது. உதாரணமாக, வாரியத்தில்

1) தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றி வந்த **858** பராமரிப்பு உதவியாளர்களுக்கு கால முறை ஊதிய விகிதம் அளிக்க உத்தரவிடப்பட்டது.

2) மதிப்பூதியத்தில் பணியாற்றிய **137** பராமரிப்பு உதவியாளர்களுக்கு தொகுப்பு ஊதியம் வழங்க உத்தரவிடப்பட்டது.

3) வாரியத்தில் முடக்கி வைக்கப்பட்டிருந்த **2004-05, 2005-06** ஆகிய ஆண்டுகளுக்கான நிலுவை போனஸ் வழங்க உத்தரவிடப்பட்டு, நிலுவைத் தொகையாக வழங்கப்பட்டது. அது மட்டுமன்றி, **2006-07** ம் ஆண்டுக்குரிய போனஸ் வழங்கியும் உத்தரவிடப்பட்டது.

4) வாரியத்தில், **20** ஆண்டுகள் மாசற்ற, விபத்தின்றி பணி ஆற்றிய **54** ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப் பதக்கமும், **10** ஆண்டுகள், மாசற்ற, விபத்தின்றி பணி புரிந்த **33** ஓட்டுநர்களுக்கு சேமிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டது.

5) **1998**ம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காலி பணியிடங்கள் நிரப்பிட ஆணைகள் வழங்கப்பட்டது. கடந்த சட்டமன்றத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் **100** புதிய உதவிப் பொறியாளர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து **74** உதவிப் பொறியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

6) வாரிய விதிமுறைகளின்படி, **17** நபர்களுக்கு ஓட்டுநர் பணி நியமனமும், **36** நபர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக பணி நியமனமும், **95** தட்டச்சர்கள் மற்றும் **23** சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு உதவியாளராக பணிமாற்றல் முறை ஆணைகள் வழங்கப்பட்டன.

7) வாரியத்தில் பணியாற்றும் **265** இளநிலை உதவியாளர்கள், 173 உதவியாளர்கள், 6 கண்காணிப்பாளர்கள், 3 துணை நிலநீர் வல்லுநர்கள், 7 உதவி நில நீர் வல்லுநர்கள், 1 இளநிலை நீர் பகுப்பாளர், 1 உதவி நீர் நிலை பகுப்பாளர், 10 முதுநிலை வரைவு அலுவலர், 9 வரைவு அலுவலர், 9 சிறப்பு வரைவு அலுவலர், 86 உதவி நிர்வாகப் பொறியாளர்கள், 40 நிர்வாகப் பொறியாளர்கள், 4 மேற்பார்வைப் பொறியாளர்கள், 2 பொறியியல் இயக்குநர்கள் ஆக மொத்தம் 774 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

8) கருணை அடிப்படையில் அரசு மற்றும் வாரிய விதிமுறைகளின்படி 10 இளநிலை வரைவு அலுவலர்கள், 8 இளநிலை உதவியாளர்கள், 8 தட்டச்சர்கள், 5 பொருத்துநர்கள் மற்றும் 2 மின்பணியாளர்கள் ஆக 33 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

**இதனைத் தொடர்ந்து, ஏற்கெனவே பணியமர்த்தப்பட்ட 74 உதவிப் பொறியாளர்கள் போக மீதம் உள்ள 26 உதவிப் பொறியாளர்கள் பணி நியமன ஆணை மற்றும் 20 ஆண்டுகள் மாசற்ற, விபத்தின்றி பணி புரிந்த 88 வாரிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப் பதக்கமும், 10 ஆண்டுகள் மாசற்ற, விபத்தின்றி பணி புரிந்த 13 வாரிய ஊர்தி ஓட்டுநர்களுக்கு சேமிப்புப் பத்திரம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று (08.08.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது.**

இந்நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு கே. தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண்சிங், இ.ஆ.ப., திரு ம. துரைராஜ், வாரிய பொறியியல் இயக்குநர், திரு கை. கணேசன், நிதி இயக்குநர் மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**